


# இடம் பொருள் கலைஞர்

96

**மகிழவன்**

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து, இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டம்!



# மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டம்!

## பெண் கல்வியில் கலைஞர் புரட்சி

முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தபோதெல்லாம் இந்தியாவிற்கே முன்னோடியாகப் பெண்களுக்கு உரிமையும், அதிகாரமும் அளிக்கும் பல்வேறு திட்டங்களையும் சட்டங்களையும் தீட்டி பல்வேறு தடைகளைக் கடந்து நடைமுறைப்படுத்தியிருக்கிறது. அந்த வகையில், 1989-ஆம் ஆண்டு கலைஞரின் பிறந்த நாளன்று தொடங்கப்பட்ட திட்டம்தான் 'மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டம்'.

### மூவலூர் மூதாட்டி

தந்தை பெரியாரின் வழி வந்த பெண் விடுதலைக் குரல் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார். தேவதாசி முறை ஒழிப்புக்காக தன் வாழ்நாளில் பெரும் பகுதியைச் செலவிட்ட போராளி. பெண் பிள்ளைகளுக்குக் கல்வி அளிக்க வேண்டும் என்பதற்காகத் தன் வாழ்நாளெல்லாம் இயங்கியவர்.

அவரது உழைப்பையும், நினைவையும் போற்றும் வகையில், வறுமையில் வாழும் பெற்றோர்களின் பெண் குழந்தைகளுக்குக் கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்தவும், பொருளாதார ரீதியாக அவர்களுக்கு உதவும் வகையிலும் உருவாக்கப்பட்ட முன்னோடித் திட்டம்தான் 'மூவலூர் ராமாமிர்தம் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்'.

இத்திட்டத்தின் நோக்கமே, பெண் பிள்ளைகளின் திருமணத்தின்போது நிதியுதவி கிடைக்கும் என்கிற எண்ணத்தில், பெண் பிள்ளைகளைப் பெற்றோர் படிக்க அனுமதிப்பார்கள்; அதன் வழியாக பெண்களுக்குக் குறைந்தபட்ச கல்வியாவது கிடைத்திடச் செய்ய வேண்டும் என்பதுதான். இந்தத் திட்டத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்திய போது, எட்டாம் வகுப்பு வரை அல்லது அதற்கு மேலும் படித்த 18 வயது நிரம்பிய ஏழைப் பெண்கள் திருமணத்தின்போது ரூ. 5,000 வழங்கப்படும் என்றும் அறிவித்தார் கலைஞர். பழங்குடிப் பெண் பிள்ளைகள் ஐந்தாம் வகுப்பு வரை படித்திருந்தாலும் இந்தத் திட்டம் பொருந்தும் என்றும் அறிவித்தார்.

திட்டம் அறிவிக்கப்பட்ட 1989-ஆம் ஆண்டு முதல், இரண்டரை ஆண்டுகளில் 11.1.1991 ஆண்டு வரையில், 34 ஆயிரத்து 595 பெண்களுக்கு ரூ. 17 கோடியே 30 இலட்சம் நிதி உதவியை கலைஞர் அரசு வழங்கியது.

### சீர்குலைக்கப்பட்ட திட்டம்

1991-ஆம் ஆண்டு அமைந்த அ.தி.மு.க. தலைமையிலான அரசு, திருமண வயது வரம்பை 18-இல் இருந்து 21 ஆக உயர்த்தி அறிவித்தது. தவிர திருமணம், அரங்குகளில் நடைபெற்றால், நிதியுதவி கிடைக்காது என்றும் ஆணைகளை வெளியிட்டு, திட்டத்தைச் சீர்குலைத்தது. எனினும், பெண்களின் கல்வி கற்கும் ஆர்வத்தைக் குலைக்க முடியவில்லை என்பதால், திட்டத்தை நிறுத்தவும் முடியவில்லை. அந்த ஐந்து ஆண்டு காலத்தில், 53 ஆயிரத்து 229 மகளிர் உதவியைப் பெற்றனர்.

1996-ஆம் ஆண்டு, நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர், அ.தி.மு.க. அரசு மாற்றிய 21 வயது வரம்பை, மீண்டும் 18 ஆக குறைத்தும், பத்தாம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும் என்றும் அறிவித்தார். நிதியை ரூ. 10 ஆயிரமாகவும் உயர்த்தினார். இதன்மூலம் ஏழைப் பெண்கள் எட்டாம் வகுப்பு என்கிற நிலையில் இருந்து 10-ஆம் வகுப்பு வரை படிக்க உந்துதல் உருவானது. உயர்நிலைக் கல்வி வரை பெண்களின் கல்வி விகிதாச்சாரம் உயர்ந்தது. 1996-ஆம் ஆண்டு முதல் 2001-ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிக் காலத்தில், இரண்டு லட்சத்து 28 ஆயிரத்து 593 ஏழைப் பெண்களுக்கு 228 கோடியே 59 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் நிதியுதவியாக வழங்கி இருந்தது கழக அரசு. 2001-ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், இந்தத் திட்டத்தை முடக்கியது அ.தி.மு.க. அரசு.

### புத்துயிர் பெற்ற திட்டம்

2006-ஆம் ஆண்டு ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்த கலைஞர், முடக்கப்பட்ட திட்டத்தை மீண்டும் உயிர் பெறச் செய்தார்.

**பெண்களின் உயர்கல்விச் சேர்க்கையில் தமிழ்நாடு புதிய புரட்சியைச் செய்து கொண்டிருக்கிறது. அந்தப் புரட்சிக்கு அடித்தளம் அமைத்தவர் கலைஞர் என்பதைக் காலம் சொல்லிக்கொண்டிருக்கிறது.**

2006-ஆம் ஆண்டு, அவரது பிறந்த நாளின் போது, 10 ஆயிரம் ரூபாயாக இருந்த நிதி உதவியை, 15,000 ரூபாயாக உயர்த்தி அறிவித்தார்.

2008-ஆம் ஆண்டிலிருந்து நிதி உதவியை ரூ.20 ஆயிரமாகவும், 2010-ஆம் ஆண்டு முதல் ரூ.25 ஆயிரமாகவும் உயர்த்தி அறிவித்தார் கலைஞர். குறிப்பாக, 10-ஆம் வகுப்பு வரையிலான கல்வித் தகுதியை 12-ஆம் வகுப்பு வரை என்றும் அறிவித்து பெண்களின் உயர் கல்விக்கு அழுத்தமான அடித்தளம் அமைத்தார்.

2006-ஆம் ஆண்டு முதல் 2010-ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுகளில் நான்கு லட்சத்து 64 ஆயிரத்து 756 ஏழைப் பெண்களுக்கு 880 கோடியே 55 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் நிதி உதவியாக வழங்கப்பட்டது. தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழ்க் குடும்பங்களைச் சார்ந்த 1,100 பெண்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் ரூ.2 கோடியே 20 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

### நோக்கம் மறந்த அரசு

2011-ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு, பெண்கள் கல்வி கற்க உருவாக்கப்பட்ட திட்டத்தை முழுமையாக சீர்குலைத்து, 'தாலிக்குத் தங்கம்' என மாற்றி, திட்டத்தின் நோக்கத்தையே மாற்றினர்.

பட்டப்படிப்புப் படித்த ஏழைப் பெண்ணின் திருமணத்துக்கு ஒரு சவரன் தங்கத்துடன் ரூ.50 ரொக்கம், பள்ளிப்படிப்பு முடித்த பெண்களின் திருமணத்துக்கு 4 கிராம் தங்கத்துடன் ரூ. 25 ஆயிரம் ரொக்கம் என அறிவித்தது அ.தி.மு.க அரசு. கல்லூரிப் படிப்பு வரை பெண்கள் படிப்பதற்கான ஆர்வத்தைத் தூண்டினாலும், திட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தவில்லை. பல குளறுபடிகள் ஏற்பட்டன. பயனாளிகள் இடைத்தரகர்களை நாட வேண்டிய சூழலை உருவாக்கி இருந்தனர். 24 சதவிகித பயனாளிகள் மட்டுமே பயன் அடைந்ததுடன், பல முறைகேடு வழக்குகளும் போடப்பட்டன.

### புதுமைப்பெண் திட்டம்

2021-ஆம் ஆண்டு பொறுப்பேற்ற திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டில் மாணவிகளின் உயர்கல்விச் சேர்க்கை விகிதம் குறைவாக இருப்பதைக் கருத்தில்கொண்டு, மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்தை, மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டமாக மாற்றியமைத்து.

அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் ஆண்டுக்கு சுமார் 6 லட்சம் மாணவிகளுக்கும் மாதம் 1,000 ரூபாய் அவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாகச் செலுத்தும் 'புதுமைப்பெண்' திட்டமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது 'திராவிட மாடல்' அரசு. அதன்மூலம் பெண்களின் உயர்கல்விச் சேர்க்கையில் தமிழ்நாடு புதிய புரட்சியைச் செய்து கொண்டிருக்கிறது. அந்தப் புரட்சிக்கு அடித்தளம் அமைத்தவர் கலைஞர் என்பதைக் காலம் சொல்லிக்கொண்டிருக்கிறது.

**...வலம் வருவோம்**

## குழப்பங்கள் + குளறுபடிகள் = பா.ஜ.க. வெற்றி!

மகாராஷ்டிரா மாநில சட்டமன்றத்துக்கான தேர்தல் முடிவடைந்து, அங்குப் புதிய ஆட்சி அமைப்பதற்கான முனைப்புகளில் பா.ஜ.க. கூட்டணியினர் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில், பா.ஜ.க.வின் வெற்றியில் பல சந்தேகங்களை எதிர்க்கட்சிகள் எழுப்பியுள்ளன.

'பதிவான வாக்குகளைவிட, எண்ணப்பட்ட வாக்குகள் அதிகமாக உள்ளதாக' ஓர் ஆய்வினை வெளியிட்டுள்ளது 'தி வயர்' இணைய இதழ்.

தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள தகவல்களின்படி 66.05 சதவிகித வாக்குப் பதிவு நடைபெற்றுள்ளது. குறிப்பாக, 6 கோடியே 40 லட்சத்து 88 ஆயிரத்து 195 வாக்குகள் பதிவாகியுள்ளன. அதில் 3 கோடியே 6 லட்சத்து 49 ஆயிரத்து 318 பெண்கள், 3 கோடியே 34 லட்சத்து 37 ஆயிரத்து 57 ஆண்கள், இதர வாக்குகள் 1,820 ஆகும். ஆனால், 6 கோடியே 45 லட்சத்து 92 ஆயிரத்து 508 வாக்குகள் எண்ணப்பட்டுள்ளன. அதாவது பதிவான வாக்குகளைவிட, 5 லட்சத்து 4 ஆயிரத்து 313 வாக்குகள் அதிகமாக எண்ணப்பட்டுள்ளன.

எட்டுத் தொகுதிகளில் பதிவான வாக்குகளைவிட, குறைவான வாக்குகளே எண்ணப்பட்டுள்ளன. சில தொகுதிகளில் பதிவானதைவிட, அதிக வாக்குகள் எண்ணப்பட்டுள்ளன. நவபுர் (Nawapur) தொகுதியில் 2 லட்சத்து 40 ஆயிரத்து 22 வாக்குகள் பதிவாகியுள்ளன. ஆனால், எண்ணப்பட்ட வாக்குகள் 2 லட்சத்து 41 ஆயிரத்து 193 எனத் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. வாக்குப் பதிவுக்கும் எண்ணிக்கைக்கும் இடையில் 1,171 வாக்கு வித்தியாசம் உள்ளது. வெற்றிபெற்றவரின் வாக்கு வித்தியாசம் 1,122.

நாஷிக் தொகுதியில் ஒரு வேட்பாளருக்கு 4 வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன. ஆனால், அவரின் குடும்ப உறுப்பினர்கள் 65 பேர் அவருக்கே வாக்குப்பதிவு செய்துள்ளனர். இப்படிப் பல குழப்பங்கள் நடந்துள்ளன. இதுதொடர்பாக, 450 புகார்கள் அளிக்கப்பட்டும் தேர்தல் ஆணையம், அவற்றை விசாரிக்காமல் நிராகரித்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வாக்கு இயந்திரத்தின் மீதான நம்பகத்தன்மை குறித்து, பா.ஜ.க. மற்றும் அவர்கள் கூட்டணியில் இல்லாத கட்சிகள் தொடர்ச்சியாக, அழுத்தம் கொடுத்து வருகின்றன. ஜனநாயகம் உயிர்ப்போடு இருக்க வேண்டும் என்றால், தேர்தல் ஆணையம் தன்னிச்சையாக இயங்க வேண்டும் என்பதை, மகாராஷ்டிரா மாநிலத் தேர்தலும் சொல்கிறது.

## ::ப்ளாஷ்பேக்

### ஸ்ரீவில்லிப்புத்தூர் முன்னோடியுடன் தளபதி!



கழகத்தின் இளைஞர் அணி தொடங்கப்பட்டபோது, தமிழ்நாடு முழுவதும் இன்றைய கழகத்தலைவர் தளபதி அவர்கள் பயணம் செய்து, கட்டமைப்பை வலிமை செய்தார். அப்போது, ஸ்ரீவில்லிப்புத்தூர் வந்தவர், மாநில இலக்கிய அணிச் செயலாளராக இருந்த எனது தந்தையார் அமுதன் அவர்களை இல்லத்தில் சந்தித்துள்ளார். எங்கள் வீட்டுக்கு எதிரில் இருந்த மண்டபத்தில் இளைஞர் அணிக் கூட்டம் நடைபெற்றது. எனது தந்தை, பாட்டி சின்னத்தாயம்மாள், கழகப் பிரச்சாரப் பாடகர் சாமிமணி ஆகியோருடன் தளபதி அவர்கள் இருக்கும் இந்தப் புகைப்படம், அப்போது எடுக்கப்பட்டது.



அன்புநிதி அமுதன்

**- அன்புநிதி அமுதன், சென்னை,**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### திருச்சி மாநாடும் பெரியாரும்...


1945-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம், திருச்சி, புத்தூர் மைதானத்தில் இரண்டு மாநாடுகள் நடைபெற்றன. செப்டம்பர் 29-ஆம் தேதி, பெரியார் தலைமையில் நீதிக்கட்சி மாநாடும், அதற்கு அடுத்த நாள் திருவொற்றியூர் டி.சண்முகம் தலைமையில், பேரறிஞர் அண்ணா வரவேற்புக் குழுத் தலைவராக இருந்த 'சுயமரியாதை இயக்க மாநாடும்' நடைபெற்றன. மாநாட்டுக்கு முதல்நாள் பெய்த மழையில் மாநாடு நடைபெறும் இடமே சகதியானது. தண்ணீரை வெளியேற்றி, ஆற்றுமணல் கொண்டுவரப்பட்டு, இரவோடு இரவாக சேறு சரிசெய்யப்பட்டது. அந்த மாநாட்டில்தான் 'திராவிடர் கழகத்துக்கு பெரியார்தான் நிரத்தரத் தலைவர்' எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

673

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131